# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 76 | 4 Pages | 18.10.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 76 | 4 பக்கங்கள் | 18.10.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## நிதாரி பாலியல், கொலை வழக்கு: மரண தண்டனை விதிக்கப்பட்ட 2 பேரும் விடுதலை அலகாபாத் ஐகோர்ட்டு தீர்ப்பு



அலகாபாத், அக். 18

உத்தரபிரதேச மாநிலம் நிதாரி பகுதியில் உள்ள ஒரு பங்களாவில் கடந்த 2006ம் ஆண்டு சிறுமிகள் உள்பட 19 பெண்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

தீவிர விசாரணையில் தொழில் அதிபர் மொகிந்தர் சிங் பாந்தர் என்பவர் அவர்களை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்து வீட்டி'ல் புதைத்தது தெரியவந்தது.

இதனையடுத்து தொழில் அதிபரையும், அவரது உதவியாளர் சுரேந்திர கோலி என்பவரையும் போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கை கடந்த 2017ம் ஆண்டு விசாரித்த சி.பி.ஐ. சிறப்பு கோர்ட்டு, இருவருக்கும் மரண தண்டனை விதித்து பரபரப்பு தீர்ப்பு கூறியது.

இதை எதிர்த்து 2 பேரும் அலகாபாத் ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது போதிய ஆதாரங்கள் இல்லாததால் இருவரையும் விடுதலை செய்வதாக நீதிபதி தீர்ப்பு கூறினார்.

## சத்தீஷ்கரில் பா.ஜனதா ஆட்சிக்கு வந்தால் ஊழல்வாதிகளிடம் இருந்து ஒவ்வொரு பைசாவையும் மீட்போம்– அமித்ஷா உறுதி



ராய்ப்பூர், அக். 18

சத்தீஷ்கரில் அடுத்த மாதம் (நவம்பர்) 7 மற்றும் 17ந் தேதி என 2 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. அங்குள்ள ராஜ்நந்கான் நகரில் நேற்று நடந்த பா.ஜனதா தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கலந்துகொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

சத்தீஷ்கரில் நடந்து வரும் காங்கிரஸ் ஆட்சியில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்றுள்ளன. முதல்மந்திரி பூபேஷ் பாகேல், மாநிலத்தை டெல்லி தர்பாரின் ஏ.டி.எம்.மாக மாற்றி விட்டார். ஓட்டல்களில் உணவு சங்கிலியைப்போல டெல்லி வரை காங்கிரஸ் கட்சி ஊழல் சங்கிலியை உருவாக்கி இருக்கிறது.

சத்தீஷ்கரில் பா.ஜனதா ஆட்சிக்கு வந்தால் இந்த ஊழல்வாதிகளிடம் இருந்து ஒவ்வொரு பைசாவையும் மீட்போம். அத்துடன் அவர்கள் தலைகீழாக தொங் விடப்படுவார்கள். சத்தீஷ்கர் மாநிலம் மத்திய பிரதேசத்துடன் இணைந்து ஒன்றுபட்ட மாநிலமாக காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது மிகவும் பின்தங்கி இருந்தது. ஆனால் கடந்த 2003ம் ஆண்டு பா.ஜனதாவின் ராமன் சிங் ஆட்சிக்கு பிறகு சத்தீஷ்கர் மாநிலம் 15 ஆண்டுகளாக வளர்ச்சியடைந்தது.

மாநிலத்தில் தற்போது ஆட்சி செய்யும் காங்கிரசின் பூபேஷ் பாகேல் அரசு மிரான்பூரில் வகுப்புவாத வன்முறைகளுக்கு காரணமாக இருந்தது. இந்த மாநிலம் வன்முறைகளின் மையமாக மீண்டும் மாறுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?. சத்தீஷ்கரில் அடுத்த மாதம் நடைபெறும் சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் வாக்கு வங்கிக்காக திருப்திபடுத்தும் அரசியலையே மீண்டும் தொடரும்.

வரவிருக்கும்தேர்தல்கள்எந்தஅரசையோஅல்லதுஎம்.எல்.ஏ.க்களையோ தேர்ந்தெடுப்பதற்காக அல்ல. மாறாக பிரதமர் மோடியின் தலைமையில் ஒரு பொன்னான எதிர்காலத்தை உருவாக்குவதற்கானது. மாநிலத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் டிசம்பர் 3ந்தேதி தாமரை மலரும் என்பதையே இங்கு கூடியிருக்கும் மக்களிடையே கரைபுரளும் உற்சாகம் காட்டுகிறது.

இவ்வாறு உள்துறை மந்திரி அமித்ஷா கூறினார்.

## பெல்ஜியத்தில் பயங்கரவாத தாக்குதல்: 2 பேர் பலி



பிரசெல்ஸ், அக். 18

பெல்ஜியம் தலைநகர் பிரசெல்சில் நேற்று இரவு பயங்கரவாத தாக்குதல் நடத்தது. யூரோ கால்பந்து தொடரின் தகுதிச்சுற்று ஆட்டம் நேற்று நடந்தது. பிரசெல்ஸ் நகரில் நடந்த ஆட்டத்தில் பெல்ஜியம் ஸ்வீடன் மோதின. ஆட்டம் நடைபெறும் மைதானத்திற்கு வெளியே ரசிகர்கள் சிலர் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது, பைக்கில் வந்த பயங்கரவாதி தான் வைத்திருந்த ஏகே 47 ரக துப்பாக்கியால் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக சுட்டார். இந்த கொடூர தாக்குதலில் ஸ்வீடன் நாட்டை சேர்ந்த கால்பந்து ரசிகர்கள் 2 பேர் உயிரிழந்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய பயங்கரவாதி அங்கிருந்து பைக்கில் தப்பிச்சென்றுவிட்டார்.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தால் பெல்ஜியம் ஸ்வீடன் இடையேயான ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது. துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்திய பயங்கரவாதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் ஈர்க்கப்பட்டுள்ளான். மேலும், தாக்குதல் நடத்திய பின் பயங்கரவாதி பேஸ்புக்கில் வீடியோ வெளியிட்டுள்ளான். அதில், அரபு மொழியில் பேசிய அந்த பயங்கரவாதி, கடவுளின் பெயரால் தாக்குதல் நடத்தி 2 பேரை கொன்றுவிட்டதாகவும் கூறினான்.

இதனை தொடர்ந்து தாக்குதல் நடத்திய பயங்கரவாதி தலைமறைவான நிலையில் அவரை தேடும் பணிகள் பாதுகாப்புப்படையினர் துரிதமாக நடந்து வருகின்றனர்.

# வணிகர்களின் வரி நிலுவை தொகை தள்ளுபடி முதல்வருக்கு வணிகர் சங்க பேரவை பாராட்டு

சென்னை, அக். 18

தென்சென்னைகிழக்குமாவட்ட வணிகர் சங்க பேரவை தலைவர் கிருஷ்ணகுமார் விடுத்துள்ள அறிக்கையில், அரசின் சமாதான திட்டத்தின்படி வணிகர்களுக்கு ரூ. 50 ஆயிரம் வரையிலான வரி நிலுவைத் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றிய முதலமைச்சருக்கும் , இதற்கு உறுதுணையாக இருந்து எங்களைவழி நடத்தி செல்லும் தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை மாநிலத் தலைவர் வெள்ளையன் மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் மூர்த்தி ஆகியோருக்கு எங்களது



நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தற்போது ஆன்லைன் வர்த்தகத்தால் சிறு, குறு வணிகர்கள் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதில் தற்போது மின்சார கட்டணமும், சொத்து வரியும் கூடுதலாக இருப்பதால் சிறு குறு வணிகர்கள் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வருமானமும் பின்தங்கிய நிலையில் உள்ளது. எனவே, வணிகர்களின் வாழ்வாதரத்தை காப்பாற்ற மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

# காம்பவுண்ட் சுவரை இடித்து அகற்றிய 8 பேர் மீது வழக்கு

குன்னத்தூர், அக். 18

குன்னத்தூர் அருகே வலையபாளையத்தில் வசிப்பவர் வடிவேலு . இவருக்கும் அருகில் வசிக்கும் கிட்டுச்சாமி என்பவருக்கும் காம்பவுண்ட் சுவர் சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது.சம்பவத்தன்றுகிட்டுச்சாமி உறவினர்கள் 8 பேர் காம்பவுண்ட் சுவரை இடித்து அப்புறப்படுத்தினர்.

இது குறித்த புகாரின் பேரில் குன்னத்தூர் போலீசார் கிட்டு சாமி உள்பட 8 பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆடு, மாடுகளுடன் கோட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேற முயன்ற விவசாயிகளை காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர்.

# மின் இணைப்புகளை மீண்டும் வழங்க வலியுறுத்தி தாராபுரத்தில் விவசாயிகள் போராட்டம்

தாராபுரம், அக். 18

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே உள்ள பெதப்பம்பட்டி பகுதியில் 12 விவசாயிகளின் மின் இணைப்பை மின்வாரிய அதிகாரிகள் கடந்த 2 நாள்களுக்கு முன்பு துண்டித்தனர்.இதைக் கண்டித்தும், மின் இணைப்பைத் துண்டித்த அதிகாரிகளுடனும் விவசாயிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, கோட்டாட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை பேச்சுவார்த்தை நடத்திக் கொள்ளலாம் எனக்கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலும் மின் இணைப்புகளைத் துண்டிக்காமல் திரும்பி சென்றனர்.

இந்நிலையில், ஆடு, மாடுகளுடன் கோட்டாட்சியர் அலுவலகத்துக்கு நேற்று வந்த விவசாயிகளை போலீசார் தடுத்து நிறுத்தினர். மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 12 விவசாயிகள் மற்றும் விவசாயிகள் பாதுகாப்புச் சங்க நிர்வாகிகள் சுமார் 20 பேர் மட்டுமே கோட்டாட்சியர் அலுவலகத்துக்குள் பேச்சுவார்த்தைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில் துண்டிக்கப்பட்ட விவசாய மின் இணைப்புகளுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் உத்தரவு அளித்தால் மட்டுமே மீண்டும் மின் இணைப்பு வழங்கப்படும் என கோட்டாட்சியர் தெரிவித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த விவசாயிகள் பேச்சுவார்த்தையிலிருந்து வெளிநடப்புசெய்தனர்.தொடர்ந்து, ஆடு, மாடுகளுடன் கோட்டாட்சியர் அலுவலகத்தில் குடியேற முயன்ற விவசாயிகளை காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து, பொள்ளாச்சிதாராபுரம்சாலையில்அமர்ந்துவிவசாயிகள் மறியலில் ஈடுபட்டனர்.மறியலில் ஈடுபட்ட 29 பெண்கள் உள்பட 146 பேரை போலீசார் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.பின்னர், மாலை அனைவரும் விடுவிக்கப்ப ட்டனர்.

# திருப்பூர் மாவட்டத்தில் கனரா வங்கி சார்பில் சிறப்பு கடன் முகாம்

திருப்பூர், அக். 18

திருப்பூர் மாவட்டத்தில் தமிழக அரசால் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" நடத்தும் திட்டம் 2023 24ம் நிதியாண்டில் நடைமுறைபடுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் நோய்வாய்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழுநீக்கம் செய்தல்,நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சினை சரி பார்ப்பு, சுண்டுவாத அறுவைசிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் மற்றும் கருப்பை மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய்தீர்க்கும் பல்வேறு சுகாதாரநடவடிக்கைகள் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இத்திட்டமானது திருப்பூர் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியத்திற்குட்ட கிராம ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியத்திற்கு தலா 20 முகாம்கள் வீதம் 260 முகாம்கள் அக்டோபர் 2023 மாதம் முதல் கால்நடை மருத்துவ வசதி இல்லாத குக்கிராமங்களிலும் கால்நடைபராமரிப்புத்துறையின்மூலம் நடத்தப்படவுள்ளது. இவ்வாய்ப்பினை கால்நடை வளர்ப்போர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறும்,

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவிமருத்துவரை விவசாயிகள், கால்நடைவளர்ப்போர் அணுகலாம் என திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

# கோடீஸ்வரராக வேண்டுமா? சந்தன மரம் வளருங்கள் காவேரி கூக்குரல் இயக்க ஒருங்கிணைப்பாளர் பேச்சு

பல்லடம், அக். 18

காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் 'கோடிகளை கொடுக்கும் சந்தனம் சாமானியர்களுக்கும் சாத்தியம்' என்ற விவசாய கருத்தரங்கு பல்லடம் அருகேயுள்ள முத்தாண்டிபாளையத்தில் தனியார் சந்தன பண்ணையில் நடைபெற்றது. இதில் உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து கலந்து கொண்டு பேசினார்.

காவேரி கூக்குரல் இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறன் பேசுகையில், உலகிலேயே மிக விலை உயர்ந்த மரம் சந்தன மரம் தான். இம்மரத்தை வளர்ப்பதன் மூலம் 15 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு மரத்தில் இருந்து மட்டும் குறைந்தப்பட்சம் ரூ.2 லட்சமும், 25 ஆண்டுகளுக்கு பிறகு ரூ.5 லட்சம் முதல் ரூ.7.5 லட்சம் வரையிலும் விவசாயிகள் சம்பாதிக்க முடியும். சந்தன மரத்தை எல்லா வகையான மண்ணிலும் வளர்க்க முடியும். இம்மரம் உப்பு தண்ணீரிலும் கூட வளரும் சாத்தியம் உள்ளது. இம்மரத்திற்கு இவ்வளவு சிறப்புகள் இருந்தும் திருட்டு பயம் காரணமாக இதை வளர்க்க தயங்குகின்றனர். ஆனால், தற்போதைய தொழில்நுட்ப காலத்தில் மைக்ரோ சிப், சென்சார் மற்றும் ரேடார் தொழில்நுட்பம் என பல்வேறு விதமான தொழில்நுட்ப கருவிகள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. அடுத்த 15 ஆண்டுகளுக்குள் இன்னும் பல கருவிகள் வந்துவிடும். எனவே, சந்தன மரத்தை பயமின்றி நடவு செய்யலாம். இந்திய சந்தனத்திற்கு உலகளவில் பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. 1950ம் ஆண்டுகளில் சுமார் 4,000 டன் வரை சந்தனத்தை நாம்




வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருமானம் ஈட்டினோம். ஆனால், தற்போது நம்முடைய உள்நாட்டு தேவைக்கு கூட வெளிநாடுகளில் இருந்து சந்தனத்தை இறக்குமதி செய்து வருகிறோம். எனவே சந்தன மரத்திற்கான தேவை நம்மிடம் அதிகம் இருக்கிறது. அதை பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டில் விவசாயிகள் அதிகளவில் சந்தன மரங்களை வளர்க்க வேண்டும். சந்தன மரத்தை வெட்டி விற்பனை செய்வதில் உள்ள சட்ட சிக்கல்களும் படி படியாக நீங்கி வருகிறது. சமீபத்தில் மத்திய அரசு கொண்டு வந்த சட்ட திருத்தத்தில் கூட வன சட்டங்கள் எதுவும் விவசாய நிலங்களுக்கு பொருந்தாது என கூறியுள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தாங்கள் விரும்பும் எந்த வகையான மரத்தையும் தங்கள் நிலங்களில் வளர்த்து விற்க முடியும். எனவே, விவசாயிகள் கோடீஸ்வரர்களாக மாறுவதற்கு சந்தன மரம் வளர்ப்பது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்றார். இதில் திருப்பூர் மாவட்ட எஸ்.பி., சாமிநாதன், விவசாய சங்கத் தலைவர்கள், முன்னோடி விவசாயிகள், வனத்துறை அதிகாரிகள், வேளாண் விஞ்ஞானிகள், சுமார் 2000க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# மஞ்சளாறு அணை 55 அடியை எட்டியது

தேனி, அக். 18

தேவதானப்பட்டி அருகே 57 அடி உயரம் கொண்ட மஞ்சளாறு அணை உள்ளது. இந்த அணையில் இருந்து நேற்று முன்தினம் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அப்போது அணையின் நீர் மட்டம் 54.95 அடியாக இருந்தது. பழைய ஆயக்கட்டுபகுதிக்குவினாடிக்கு 60 கனஅடி வீதமும், புதிய ஆயக்கட்டு பகுதிக்கு வினாடிக்கு 40 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தது.



இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததுடன், நீர் மட்டம் 55 அடியை எட்டியது. பொதுவாக மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 51 அடியை எட்டியதும் முதற்கட்டமாகவும், 53 அடியை எட்டியதும் 2ம் கட்டமாகவும், 55அடியை எட்டியதும் 3ம் கட்டமாகவும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பது வழக்கம். அதன்படி, நீர்மட்டம் 55 அடியை எட்டிய நிலையில் பாதுகாப்பு கருதி கரையோரமக்களுக்கு 3ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலக்குண்டு, பழைய வத்தலக்குண்டு, குன்னுவாரன் கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் மஞ்சளாற்றின் கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். தற்போது அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 126 கன அடியாக உள்ளது. இந்த தண்ணீர் அப்படியே உபரி நீராக வெளியேற்றப்பட்டு வருகிறது.

# தீக்குளிக்க மண்எண்ணெய் பாட்டிலுடன் வந்த வயதான தம்பதி



திண்டுக்கல், அக். 18

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரம் குரும்பபட்டியை சேர்ந்தவர் சீனிவாசன் (வயது 75). அவருடைய மனைவி மீனாட்சி (68). நேற்று இவர்கள் 2 பேரும், திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு வந்தனர். கலெக்டர்அலுவலகவளாகத்தின் நுழைவுவாயிலில் நின்ற போலீசார், தம்பதி கொண்டு வந்த பையை சோதனையிட்டனர். அப்போது வயதான தம்பதி, ஒரு பாட்டிலில் மண்எண்ணெயை கொண்டு வந்ததை போலீசார் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். இதையடுத்து தம்பதியிடம், போலீசார் விசாரணை நடத்தினர். உடனே வயதான தம்பதி கதறி அழுதபடி கூறியதாவது:

நாங்கள் பழனி அடிவாரம் பகுதியில் 25 ஆண்டுகளாக இட்லி கடை நடத்தி வருகிறோம். மேலும் அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில் எங்களுடைய இட்லி கடையை காலிசெய்யும் படிசிலர்மிரட்டுகின்றனர். இதனால் வாழ்வாதாரத்தை இழந்து விடும் நிலையில் இருக்கிறோம். இதுகுறித்து போலீசில் புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் விரக்தியில் தீக்குளிக்க மண்எண்ணெயை கொண்டு வந்தோம், என்று கண்ணீர் மல்க தெரிவித்தனர். இதையடுத்து வயதான தம்பதியை, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்துக்கு போலீசார் அழைத்து சென்றனர். அங்கு அவர்கள் புகார் மனு கொடுத்தனர். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஓலா, உபேர் வாடகை கார் ஓட்டுநர்கள் வேலைநிறுத்தம்

சென்னை, அக். 18

ஓலா, உபேர் போன்ற செயலியை அரசு ஏற்று நடத்த வேண்டும், வாகனங்களுக்கு மீட்டர் கட்டணம் நிர்ணயித்தல், பைக் டாக்ஸிகளை தடைசெய்தல் போன்ற பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தி 3 நாட்களுக்கு போராட்டத்தில் ஈடுபட போவதாக ஓட்டுநர்கள் அறிவித்து இருந்தனர்.




அதன்படி நேற்று அவர்கள் சென்னை சின்னமலையில் உள்ள சரக்கு போக்குவரத்து அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதில் ஓட்டுநர்கள் தங்களது போனில் இருந்து செயலியை நீக்கி விட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் இன்றும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மதுரை,திருச்சி, கோவையிலும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மேலும் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே நாளை பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பழனி பகுதியில் வானில் வட்டமிட்டபடி பறந்த விமானம்

பழனி, அக். 18

கோவை மாவட்டம் சூலூர் விமான பயிற்சி பள்ளியில் இருந்து பயிற்சி விமானங்கள், ஹெலிகாப்டர்கள் அவ்வப்போது பழனி மற்றும் அதன் சுற்று பகுதிகளில் பறந்து செல்வது வழக்கம். அப்போது அவை தாழ்வாகவே பறந்து செல்கின்றன. அதன்படி நேற்று மதியம் சுமார் 12 மணி அளவில், பழனி பகுதியில் விமானம் ஒன்று தாழ்வாக பறந்தபடி வந்தது. பின்னர் அது 3 முறை வானில் வட்டமடித்துவிட்டு சென்றது.



இதற்கிடையே விமானம் தாழ்வாக பறந்தபோது அதிக சத்தம் எழுந்ததால் பொதுமக்கள் என்னமோ, ஏதோ என்று பதறியடித்தபடி வெளியே வந்து பார்த்தனர். அதன்பிறகே அது விமானம் என்று தெரிந்தது.

அதையடுத்து பொதுமக்கள் தங்கள் செல்போனில் அதை புகைப்படம் எடுத்தனர். இதுகுறித்து போலீசார் கூறும்போது, சூலூர் தளத்தில் இருந்து பயிற்சிக்கு வந்த ராணுவ விமானமாக இருக்கலாம் என்றனர். பழனியில் தாழ்வாக விமானம் பறந்து வட்டமடித்த சம்பவத்தால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# காஞ்சீபுரத்தில் பட்டாசு கடை உரிமையாளர்களுடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆலோசனைக்கூட்டம்



காஞ்சிபுரம், அக். 18

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள பட்டாசு கடைகளில் பாதுகாப்பை உறுதி செய்யவும், தீ விபத்துக்களை தடுக்கும் பொருட்டு அரசின் உத்தரவின்படியும் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கத்திற்காகவும் மாவட்டத்தில் உள்ள நிரந்தர பட்டாசு கடை உரிமையாளர்கள் மற்றும் வட்ட அளவிலான ஆய்வுக்குழு உறுப்பினர்களுடனான ஒருங்கிணைப்புகூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பட்டாசு கடை உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டிய நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் தொடர்பாகவும் அவசர காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாகவும் தீ விபத்தை தடுக்கும் நோக்கத்தில் பட்டாசுகளை கவனமாக கையாள்வது தொடர்பாகவும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும், பாதுகாப்பு குழுக்கள் ஆய்வின்போது மேற்கொள்ள வேண்டிய நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் வெடி பொருள்துணைதலைமை கட்டுப்பாட்டு அலுவலர், மாவட்ட துணை போலீஸ் சூப்பிரண்டுகள் தீயணைப்பு அலுவலர், தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், வருவாய் கோட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பாலக்காடு - திருச்செந்தூர் ரெயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்க வேண்டும்: பயணிகள் நலச்சங்கத்தினர் வலியுறுத்தல்




உடுமலை, அக். 18

பொள்ளாச்சி ரெயில் நிலையத்தை ஆய்வு செய்ய வந்த, தெற்கு ரெயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங்கை சந்தித்து பொள்ளாச்சி ரெயில் பயணிகள் நலச்சங்கத்தினர் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது:

உடுமலை வழியாக பொள்ளாச்சி கோவை இடையே காலை மற்றும் மாலை இயக்கப்படும் ரெயிலை வாரத்தின் அனைத்து நாட்களும் இரு திசைகளில் இருந்தும் இயக்க வேண்டும்.தற்போது கோவையில் இருந்து பொள்ளாச்சிக்கு சனிக்கிழமை மாலை ரெயில் இல்லை.பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு ஞாயிறு காலை ரெயில் இல்லை. கோவை மதுரை ரெயில் கோவையில் இருந்து பொள்ளாச்சிக்கு வர 58 நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொள்கிறது. பொள்ளாச்சி கோவை இடையே காலை மற்றும் மாலை இயக்கப்படும் ரெயில் வேகத்தையும், மதுரை கோவை மதுரை ரெயிலின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டும். பொள்ளாச்சி கோவை இடையே பயண நேரத்தை, 50 நிமிடங்களாக குறைக்க வேண்டும்.

பொள்ளாச்சி மேட்டுப்பாளையம் இடையே நேரடி ரெயில்கள் இயக்க வேண்டும். பொள்ளாச்சியில் இருந்து சென்னை எழும்பூர் அல்லது தாம்பரம் ஆகிய ஊர்களுக்கு பழநி, திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம் வழியாக வந்தே பாரத் அல்லது விரைவு ரெயில்கள் தினமும் இயக்க வேண்டும். பொள்ளாச்சி பாலக்காடு வழித்தடத்தில் கூடுதல் ரெயில்கள் இயக்க வேண்டும். எர்ணாகுளம் பாலக்காடு மின்சார ரெயிலை, பொள்ளாச்சி வரை நீட்டிக்க வேண்டும்.பொள்ளாச்சி, பழநி, மதுரை வழியாக குருவாயூர் ராமேஸ்வரம் வந்தே பாரத் ரெயிலை இயக்க வேண்டும்.

பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் மீட்டர் கேஜ் காலங்களில் இருந்தது போன்று,ரெயில் பராமரிப்பு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, இங்கு இருந்து நேரடியாக பல்வேறு இடங்களுக்கு ரெயில்களை இயக்க வேண்டும்.பொள்ளாச்சி அல்லது கோவையில் இருந்து, காரைக்கால் அல்லது வேளாங்கண்ணி ஆகிய ஊர்களுக்கு பழநி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை வழியாக விரைவு ரெயில்களை இயக்க வேண்டும்.

இது குறித்து மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பில் கொடுத்த மனுவில், பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு கல்வி, மருத்துவம், தொழில் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வருகின்றனர். இதற்காக, பொது போக்குவரத்துக்கு பஸ்சை பயன்படுத்துகின்றனர். எனவே பொள்ளாச்சியில் இருந்து கோவைக்கு 6 முறை ரெயில்விட வேண்டும்.

பொள்ளாச்சியில் இருந்து சென்னை செல்ல கோவை வழியாக ரெயில் இயக்கிட வேண்டும். கேரளா துறைமுக நகரமான கொச்சியில் இருந்து தமிழக துறைமுக நகரமான தூத்துக்குடிக்கு தினசரி ரெயில் இயக்க வேண்டும்.முன்பு இருந்துள்ள பாலக்காடு பொள்ளாச்சி பயணிகள் ரெயில் தினசரி இயக்க வேண்டும். கோவையை தலைமையிடமாகக்கொண்டு, பொள்ளாச்சி ரெயில்வே நிலையத்தை உள்ளடக்கிய புது ரெயில்வே கோட்டம் உருவாக்கிட வேண்டும்.

தமிழ்நாடு பனை, தென்னை தொழிலாளர் சங்கத்தினர் கொடுத்த மனுவில், குறைவான பெட்டிகளுடன் இயங்கி கொண்டு இருக்கும் பாலக்காடு திருச்செந்தூர் ரெயிலில் கூடுதல் பெட்டிகளை இணைக்க வேண்டும். மதுரை கோவை மதுரை இயக்கப்படும் ரெயிலை, திருச்செந்தூர் வரை நீட்டிக்க வேண்டும். சென்னைக்கு அதிவிரைவு ரெயில் இயக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

# அண்ணா சைக்கிள் போட்டி: அரசு பள்ளி மாணவ, மாணவிகள் சாதனை

திருப்பூர், அக். 18

தமிழ்நாடுவிளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருப்பூர் மாவட்ட விளையாட்டு பிரிவின் சார்பில் முன்னாள் முதல்அமைச்சர் அண்ணா பிறந்த தினத்தை கொண்டாடும்வகையில்மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டி சிக்கண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் தொடங்கியது.

13 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் பெரியபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் தீக்ஷனா, விஜயலட்சுமி, ஜெய்ஸ்ரீராம் அகாடமி மாணவி பொன்ரிகாஷினி ஆகியோர் முதல் 3 இடங்களை பிடித்தனர். 15 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் பெரியபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவி திவ்யா முதலிடத்தையும், சன்மதி 2வது இடத்தையும், அவினாசிபாளையம் ஜெய்ஸ்ரீராம் அகாடமி பள்ளி மாணவி நேகா 3வது இடத்தையும் பெற்றனர். 17 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவிகள் அஞ்சலி சில்வி, மதுமிதா, ராகவர்த்தினி ஆகியோர் முறையே முதல் 3 இடங்களை பிடித்தனர்.

மாணவர்கள்பிரிவில் 13 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் திருப்பூர் சின்னச்சாமியம்மாள் மாநகராட்சி பள்ளி மாணவர் சாம் பிரசாத் முதலிடத்தையும், காங்கயம் அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த மாணவர்கள் விஸ்வா 2வது இடத்தையும், ஜீவானந்தம் 3வது இடத்தையும் பிடித்தனர். 15 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் காங்கயம் எஸ்.ஆர்.ஆர். மெட்ரிக் பள்ளி மாணவர்கள் முகுந்தன் முதலிடத்தையும், அஸ்வின் 2வது இடத்தையும், காங்கயம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் ஹரிஷ் 3வது இடத்தையும் வென்றனர். 17 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் திருப்பூர் நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் பள்ளி மாணவர் மணிபிரசாத் முதலிடத்தையும், பெருமாநல்லூர் அரசு பள்ளி மாணவர் கோடீஸ்வரன் 2வது இடத்தையும், நஞ்சப்பா மாநகராட்சி பள்ளி மாணவர் முகமது இப்ராகிம் வாசிக் 3வது இடத்தையும் வென்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. சிக்கண்ணா அரசு கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார், உடற்கல்வி இயக்குனர் ராஜாராம், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் மகேந்திரன், மாவட்ட கபடி நடுவர் குழு தலைவர் முத்துசாமி, நேரு யுவகேந்திரா ராஜேந்திரன் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள்.

முதல் பரிசாக ரூ.5 ஆயிரம், 2வது பரிசாக ரூ.3 ஆயிரம், 3வது பரிசாக ரூ.2 ஆயிரம் மற்றும் 4 முதல் 10 இடம் பிடித்தவர்களுக்கு தலா ரூ.250 மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# உடுமலை கோவில்களில் நவராத்திரி வழிபாடு

உடுமலை, அக். 18

கல்வி, செல்வம், வீரம் என மூன்று சக்திகளை கொண்ட தேவியர்களை நோக்கி அனுஷ்டிக்கும் விரதங்களில் ஒன்றுதான் நவராத்திரி விரதம்.இந்த விழாவானது புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்கு பிறகு வருகின்ற வளர்பிறை ஒன்பது நாட்களும் கொண்டாடப்படுகிறது.



விழாவின் முதல் மூன்று நாட்களும் வீரசக்தியின் தோற்றமான பார்வதி தேவியையும், நடுவில் உள்ள மூன்று நாட்களும் செல்வசக்தியின் தோற்றமான லட்சுமி தேவியையும்,இறுதி மூன்று நாட்களும் கல்விசக்தியின் தோற்றமான சரஸ்வதி தேவியையும்,10வது நாள் விஜய சாமுண்டீஸ்வரியையும் வழிபாடு செய்யப்படுகிறது.

பெண்களுக்கே உரித்தான இந்த பண்டிகை நாட்களில் விரதமிருந்து வழிபட்டால் சகல சௌபாக்கியமும் கிடைக்கும் என்பது ஐதீகம். இதனால் பெண்கள் ஆண்டு தோறும் தவறாமல் விரதம் இருந்து வீடுகளில் கொலு வைத்தும் கோவிலுக்கு சென்று வழிபாடு செய்தும் வருகின்றனர்.

அந்த வகையில் இந்த ஆண்டு 23ம் தேதி வரை நவராத்திரி விழா கொண்டாடப்பட உள்ளது.இதை முன்னிட்டு உடுமலை பகுதியில் உள்ள கோவில்களில் கொலு வைத்து நவராத்திரி விழா தொடங்கி உள்ளது.உடுமலை திருப்பதி வேங்கடேச பெருமாள் கோவிலில் முதல் நாளன்று அம்பாள் சைலபுத்திரிதேவி வடிவத்தில் ஆரஞ்சு பட்டு உடுத்தி சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.அதைத் தொடர்ந்து பக்தி பாடல் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதே போன்று உடுமலை பகுதி கோவில்களில் நவராத்திரி விழா கோலாகலமாக தொடங்கி உள்ளது.

இதற்காக கோவில்கள் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டுள்ளது.ஒரு சில பொதுமக்கள் வீடுகளில் கொலு வைத்தும் நவராத்திரி விரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

# எலையமுத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்ட கோரிக்கை



உடுமலை,அக்.17

தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் உடுமலை அருகே எலையமுத்தூர் சாலையில் செயல்பட்டு வருகிறது. இங்கு மின்சார பணியாளர், பொருத்துநர், கம்மியார், மோட்டார் வாகனம், கம்பியாள், பற்ற வைப்பவர் உள்ளிட்ட பிரிவுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இந்த சூழலில் நடப்பாண்டில் புதிதாக இன்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ் டிஜிட்டல் மேணுபேக்சரிங் டெக்னீசியன், மேணுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் ஆட்டோமேஷன்,அட்வான்ஸ் சி.என்.சி மெஷின் டெக்னீசியன் படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டது.

அதுமட்டுமின்றி அரசு உதவிகளுடன் பயிற்சியின்போது தொழில் நிறுவனங்களில் உதவித்தொகையுடன் பயிற்சி, பயிற்சி முடித்தவுடன் மத்திய மாநில அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு, மாதாந்திர உதவித் தொகையும் வழங்கப்படுவதால் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு சேர்ந்து படித்து வருகின்றனர். ஆனால் இந்தத் தொழில் பயிற்சி நிலையத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் கட்டப்படவில்லை. இதனால் போதை ஆசாமிகள் அத்து மீறலில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் குடிபோதையில் பாட்டில்களை உடைத்து தொழில் பயிற்சி நிலைய வளாகத்தில் பரவலாக வீசியும் வருகின்றனர். இதனால் மாணவர்களுக்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது.பல லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த கட்டிடம் காம்பவுண்ட் சுவர் இல்லாத காரணத்தினால் பாதுகாப்பற்று திறந்த வெளியாக உள்ளது. நுழைவு வாயிலிலை கட்டி அதற்கு கேட் போட்டு பூட்டி வைத்து உள்ளனர். எனவே உடுமலை எலையமுத்தூர் சாலையில் செயல்பட்டு வரும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்

# போலி சான்றிதழ் கொடுத்த 4 பேர் பணி நீக்கம்: மதுரை ஐகோர்ட்டு அதிரடி உத்தரவு

மதுரை, அக். 18

மதுரைதிருமங்கலத்தை சேர்ந்த சக்திராவ் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 2019 ஜனவரி 1ல் துணை ஆட்சியர், துணை போலீஸ் சூப்பிரண்டு, வணிகவரி அலுவலர் உள்ளிட்ட 181 காலிப்பணியிடங்களுக்கு எழுத்துத்தேர்வு முடிந்து நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் எனது பெயர் இடம்பெறவில்லை. தமிழ்வழியில் படித்தவர்களுக்கான இட ஒதுக்கீட்டு பட்டியலிலும் எனது பெயர் இடம்பெறவில்லை.

இது குறித்து விசாரித்தபோது தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான இட ஒதுக்கீட்டு சலுகை, தொலைநிலை கல்வியில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. எனவே, கல்லூரியில் நேரடியாக சென்று படித்து பட்டம் பெற்றவர்களுக்கு மட்டும் புதிய பட்டியல் வெளியிட்டு இந்த பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. மேலும் விசாரணையின்போது, தமிழ்வழிச்சான்றிதழ் வழங்கியதில் காமராஜர் பல்கலைக்கழகத்தில் முறைகேடு நடத்திருப்பது



தெரியவந்தது.

இதுதொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காததால், கோர்ட்டு அவமதிப்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த மாதம் 2ந் தேதி விசாரணைக்கு வந்த போது, முறைகேடுகள் குறித்து லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டதுடன், லஞ்ச ஒழிப்புத்துறையின் இடைக்கால நிலை அறிக்கை கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

அதேபோல, தமிழ் வழிக்கல்வியில் போலி சான்றுகள் வழங்கியதாக 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பல்கலைக் கழகம் தரப்பில் ஆஜரான வக்கீல் தெரிவித்தார்.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் சுப்பிரமணியம், புகழேந்தி ஆகியோர் கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, லஞ்ச ஒழிப்புத்துறையின் விசாரணை அறிக்கை பெயரளவுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தவறு நடந்ததாஇல்லையா? என்பது குறித்த தகவல்கள் இல்லை. 14 விண்ணப்பதாரர்கள் போலி சான்றிதழ்கள் கொடுத்ததாக அறிக்கையில் சொல்லிவிட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறுவது சரிதானா? இந்த அறிக்கை திருப்திகரமாக இல்லை. டி.என்.பி.எஸ்.சி.யின் இதுபோன்ற செயல்கள் மாணவர்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும்.

இது ஒட்டுமொத்த அரசுத்தேர்வுகளின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எல்லாவற்றிலும் ஊழல் நிறைந்துள்ளது. அரசுப்பணிகளுக்கு தேர்வு நடத்துவதில் இருந்து பணி நியமனம் வரை அனைத்திலும் ஊழல் நடக்கிறது. போலி சான்றிதழ் கொடுத்து பணியில் சேருபவர்கள் மக்களுக்கு எப்படி சேவை செய்வர்? பணியில் சேரும்போதே முறைகேட்டில் ஈடுபடுவர்களால் சமூகத்துக்கு மட்டுமின்றி நாட்டுக்கே ஆபத்து.

போட்டித்தேர்வுகளில் நல்ல மதிப்பெண் எடுத்தவர்கள் தேர்வு செய்யப்படுவது தான் குடிமக்களுக்கான அங்கீகாரம். முறைகேடு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் கோர்ட்டை ஏமாற்றும் முயற்சியில் டி.என்.பி.எஸ்.சி. ஈடுபட்டுள்ளது. போலி சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்தவர்களை பணிநீக்கம் செய்யாதது ஏன்? முறையான விசாரணை நடத்த லஞ்ச ஒழிப்புத்துறைக்கு என்ன தயக்கம். எனவே, போலி சான்றிதழ் கொடுத்துதுணைபோலீஸ் சூப்பிரண்டு, வணிகவரி அலுவலர் உள்ளிட்ட பணியில் சேர்ந்துள்ள 4 பேரை பணிநீக்கம் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் அறிக்கையை கோர்ட்டில்தாக்கல்செய்ய வேண்டும் என்று அதிரடியாக உத்தரவிட்டனர். மேலும் வழக்கின் விசாரணையை அடுத்த மாதம் 1ந் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# மா. கம்யூனிஸ்டு கட்சியினர் காத்திருப்பு போராட்டம்

கன்னியாகுமரி, அக். 18

ஆற்றூர் பேரூராட்சிக்கு சொந்தமான மூவாற்றுமுகம் வள்ளங்குழி சாலை பழுதடைந்து காணப்படுகிறது. இந்த சாலையை சீரமைக்கக்கோரி நேற்று காலையில் வள்ளங்குழி மக்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினரும் ஆற்றூர் பேரூராட்சி அலுவலகம் முன் திரண்டனர். பின்னர் அவர்கள் பேரூராட்சி அலுவலகம் முன் திடீரென காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்திற்கு முன்னாள் கவுன்சிலர் ராஜசேகரன் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ. லீமாரோஸ், திருவட்டார் வட்டார செயலாளர் வில்சன், மாவட்ட குழு உறுப்பினர்கள் சகாய ஆன்றனி, ரெவி மற்றும் ஸ்டீபன், மனோகரன், விஜி உள்பட பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.




இதுபற்றி தகவல் அறிந்த திருவட்டார் போலீசார் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அதில் குடிநீர் திட்டத்துக்காக குழாய் பதிக்கும் பணிகள் முடிந்ததும் சாலையை சீரமைப்பதாக ஆற்றூர் பேரூராட்சி தலைவர் பீனா அமிர்தராஜ், செயல் அலுவலர் மகேஸ்வரன் உறுதி அளித்தனர். அதைத்தொடர்ந்து அவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# பொம்மிடியில் பட்டாசு குடோனில் கலெக்டர் ஆய்வு

பாப்பிரெட்டிப்பட்டி, அக். 18

தர்மபுரி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்பட்டு வரும் பட்டாசு உற்பத்தி, குடோன் மற்றும் விற்பனை கடைகளை கண்காணிக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே பொம்மிடியில் உள்ள தனியார் பட்டாசு குடோனில் கலெக்டர்சாந்தி ஆய்வு செய்தார். அப்போது, வரைபடத்தில் உள்ளவாறு கட்டிட



அமைப்பு உள்ளதா? எனவும், உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவின்படி மட்டுமே இருப்பு உள்ளதா? எனவும், கேட்டறிந்தார். குடோனில் பட்டாசுகளை பாதுகாப்பாக வைத்திட வேண்டும். அனைத்து பாதுகாப்பு கருவிகளையும் முறையாக பராமரிக்க வேண்டும்.

பட்டாசு எடுத்து வரும் வாகனங்களை வெளி பகுதியில் மட்டுமே நிறுத்தவேண்டும் என உரிமையாளரிடம் அறிவுறுத்தினார். தீயணைப்பு கருவிகளை உரிய ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வருவாய்த்துறை அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.

பின்னர்கடத்தூர்அருகே உள்ள மடதஅள்ளி பகுதியில் இயங்கி வரும் ஜல்லி கிரசர், கல்குவாரி ஆகியவற்றையும் கலெக்டர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது பாப்பிரெட்டிப்பட்டி தாசில்தார் வள்ளி மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ரயான் துணி உற்பத்தி பாதிப்பால் விசைத்தறிகள் நிறுத்தப்பட்டதால் தொழிலாளர்கள் வேலை இழப்பு

ஈரோடு, அக். 18

ரயான் துணி உற்பத்தி பாதிப்பு காரணமாக விசைத்தறிகள் நிறுத்தப்பட்டதால், தொழிலாளர்கள் வேலை இழந்து உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள விசைத்தறிகளில் காட்டன் மற்றும் ரயான் துணிகளின் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், தமிழக அரசின் விலையில்லா வேட்டி சேலைகள், பள்ளிக்கூட சீருடைகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஈரோட்டில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் டையிங், பிளிச்சிங் செய்வதற்காக ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.



இந்தநிலையில் குஜராத்தில் டையிங் பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளதால், ஈரோட்டில் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் அனுப்பி வைக்கப்படாமல் குடோனில் தேக்கம் அடைந்து உள்ளது. அதனால் ரயான் துணிகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே விசைத்தறிகளும் நிறுத்தப்பட்டு உள்ளதால், தொழிலாளர்கள் வேலை இழந்து உள்ளனர்.

இதுகுறித்து விசைத்தறி உரிமையாளர்கள் கூறியதாவது:

குஜராத் மாநிலத்தில் கழிவுநீர் வெளியேற்றம் தொடர்பாக பிரச்சினை இருப்பதால் டையிங் தொழில் பாதிக்கப்பட்டு உள்ளது. ராஜஸ்தான் உள்பட 5 மாநில தேர்தல் அறிவிக்கப்பட்டு உள்ளதால், அங்கு துணிகளை அனுப்பி திரும்ப பெற முடியாத நிலை உள்ளது. எனவே டையிங் பணிகளுக்காகதுணிகள் ஈரோட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படாமல் உள்ளது.

ஏற்கனவே உற்பத்தி செய்த பொருட்கள் தேங்கி இருப்பதால், புதிதாக உற்பத்தி செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே உற்பத்தியை நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான விசைத்தறிகள் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# உடுமலை பகுதியில் பட்டுப்போன தென்னை மரங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

உடுமலை, அக். 18

நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று பலன் தரக்கூடிய நிலைப்பயிரான தென்னை விவசாயம் உடுமலை பகுதியில் பிரதான தொழிலாக உள்ளது. விவசாயியோடு சேர்த்து எண்ணற்ற தொழிலாளர்களின் குடும்பத்தை காப்பாற்றி வந்த தென்னை விவசாயம் இன்று குற்றுயிரும் குலைஉயிருமாக அழிவின் விளிம்பில் உள்ளது. கொப்பரைவிலைவீழ்ச்சி, ஆட்கள் பற்றாக்குறை, பருவநிலை மாறுபாட்டால் நோய் தாக்குதல், பராமரிப்பு, இடுபொருட்கள் விலை உயர்வு, தேங்காய் மற்றும் இளநீருக்கு போதிய விலை இன்மை காரணமாக தேங்காய் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

ஒரு சிலர் தென்னை விவசாயத்தை கைவிட்டும் வருகின்றனர். இந்த நிலையில் வறட்சியும் தென்னை விவசாயிகளை கடுமையாக தாக்கி வருகிறது. பருவமழையும் பொய்த்து விட்ட நிலையில் நீராதாரங்கள் முற்றிலுமாக வற்றிப் போனது. அதன்தாக்குதலில்இருந்து சமாளிக்க முடியாமல் தண்ணீரை விலைக்கு வாங்கி ஊற்றும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர்.அதைத் தொடர்ந்து



கடந்த சில நாட்களாக தண்ணீரை விலைக்கு வாங்கி தென்னை மரங்களுக்கு ஊற்றி காப்பாற்றி வந்தனர்.ஆனாலும் காற்று மற்றும் வெப்பத்தின் கோர தாண்டவத்திற்கு முன்பு விவசாயிகளின் முயற்சி வீணற்று போனது.கண்ணும் கருத்துமாக பிள்ளை போன்று பார்த்து பார்த்து வளர்த்த தென்னை மரங்கள் பலன் கொடுத்து வந்த நிலையில் தண்ணீர் பற்றாக்குறையால் துடித்து துடித்து மாண்டு போனது கண்டு விவசாயிகள் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

ஒரு சில தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலுமாக அழிந்து விட்டது. இதனால் வாழ்வாதாரத்திற்காக மாற்றுத் தொழிலை நாடிச்செல்ல வேண்டிய சூழல் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயத்தையும் விவசாயிகளையும் காப்பாற்றும் வகையில் உடுமலை பகுதியில் வறட்சியால் பட்டுப்போன தென்னை மரங்களை கணக்கீடு செய்து உரிய நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசு மற்றும் அதிகாரிகள் முன்வர வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# துங்காவியில் ரேக்ளா பந்தயம்

உடுமலை,அக்.17

உடுமலைஅருகேஉள்ள மடத்துக்குளம் ஒன்றியம், துங்காவியில் ராமேகவுண்டன்புதூர் மற்றும் துங்காவி பொதுமக்கள், மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய தி.மு.க.,மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் மாபெரும் ரேக்ளா பந்தயம் நடைபெற்றது. திருப்பூர் தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ஜெயராமகிருஷ்ணன் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பத்மநாபன், மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஈஸ்வரசாமி மடத்துக்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர்சாகுல் அமீது , ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் பால செந்தில், கு.சாமிதுரை, மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய இளைஞரணி



அமைப்பாளர் கௌதம் ராஜ் உட்பட இளைஞர் அணி நண்பர்கள், கிளைக் கழக செயலாளர்கள் கோவிந்தசாமி, சிவராஜ் உட்பட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மடத்துக்குளத்தில் ரத்ததான முகாம்



மடத்துக்குளம், அக். 18

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ரத்ததான முகாம் நடந்தது. முகாமிற்கு முன்னாள் எம்.எல்.ஏ., ஜெயராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஈஸ்வர சாமி வரவேற்று பேசினார். மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் ராதாகிருஷ்ணன், நாகராஜ், செல்வி ,சேதுபால் ,நடராஜன், செல்லப்பன் ,விஜயகுமார், சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ரத்ததான முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் , ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழிகாட்டுதலின்படி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பத்மநாபன் துவக்கி வைத்தார் .

இதில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், மாவட்ட பொருளாளர் முபாரக் அலி தலைமை செயற்குழு உறுப்பினர் மகாலிங்கம், ராமசாமி பாபு , ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் காவியஐயப்பன்,மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் லதா பிரியா ஈஸ்வர சாமி, மடத்துக்குளம் பேரூராட்சி மன்ற தலைவர் கலைவாணி பாலமுரளி உட் பட பலர் கலந்து கொண்டனர்.

முகாமில் 100 பேர் ரத்த தானம் அளித்தனர்.

# காங்கயம்: சேரன் கல்லூரியில் தொழில்நுட்ப நிகழ்ச்சி

காங்கயம், அக். 18

காங்கயம் சேரன் கலை அறிவியல் கல்லூரியில் தேசிய தொழில்நுட்ப சிம்போசியம் உக்ரா 2 கே 23 நடைபெற்றது. நிகழ்ச்சியை சேரன் தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் செந்தில்குமார் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், ஒவ்வொரு மாணவர்களிடமும் ஒளிந்துள்ள தனித்திறமைகளை வாய்ப்பு கிடைக்கும் போது அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் .அதற்கு ஆசிரியர்களும் தூண்டு கோளாக இருக்க வேண்டும் என்றார்.




இவரைத்தொடர்ந்து கல்லூரியின் துணை முதல்வர் கௌசல்யா தேவி வரவேற்று பேசினார். மாணவர்கள் எவ்வித அச்சமும் இன்றி மேடையில் தங்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்த வேண்டும் என்றார். இதனைத்தொடர்ந்து வணிகவியல் துறைத்தலைவர் தேன்மொழிசெல்வி சிறப்புரை ஆற்றினார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான தனித்துவம் இருக்கும். அதனை தகுந்த நேரத்தில் வெளிக்காட்ட வேண்டும் என்றார். இந்நிகழ்ச்சிக்கு 20க்கும் மேற்பட்ட கல்லூரியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தினர்.

நிகழ்ச்சியில் கட்டுரை வாசித்தல், வினாடி வினா,சமையல்போட்டி, குறும்பட போட்டி, புகைப்பட போட்டி, நடனப்போட்டி ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முடிவில் ஆங்கில உதவிப் பேராசிரியர் புவனா நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் 300 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

# நாச்சிபாளையத்துக்கு பஸ் வசதி வேண்டும்: சப்கலெக்டரிடம் மாணவர்கள் மனு

கோயம்புத்தூர், அக். 18

நாச்சிபாளையத்துக்கு பஸ் வசதி வேண்டும் என்று பொள்ளாச்சியில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் சப்கலெக்டரிடம், பள்ளி மாணவர்கள் மனு அளித்தனர்.

பொள்ளாச்சி சப்கலெக்டர்அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்று நடந்தது. இதற்கு சப்கலெக்டர் பிரியங்கா தலைமை தாங்கி, பொதுமக்களிடம் இருந்து மனுக்களை வாங்கினார். அப்போது நாச்சிபாளையம் கிராம மக்கள், பள்ளி மாணவ மாணவிகள் கொடுத்த மனுவில், எங்கள் கிராமத்துக்கு கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பஸ்



வசதி கேட்டு மனு கொடுத்தோம். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தினமும் 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பஸ்சில் ஏறி செல்லும் நிலை உள்ளது. அந்த பஸ்சும், பள்ளி செல்லும் நேரத்திற்கு வருவதில்லை. இதனால் படிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே உடனடியாக பஸ் வசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

சின்ன நெகமம் பொது மக்கள் கொடுத்த மனுவில், எங்கள் பகுதியில் உள்ள பொது கிணறு மற்றும் அதனை சுற்றியுள்ள இடத்தை சிலர் ஆக்கிரமித்து உள்ளனர். எனவே அந்த ஆக்கிரமிப்பை அகற்றி கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

ஆத்துப்பொள்ளாச்சி பொதுமக்கள் கொடுத்த மனுவில், மணக்கடவு, ஆத்துப்பொள்ளாச்சி, காளியப்பகவுண்டன்புதூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கிய இலவச வீட்டு மனை பட்டாக்களுக்கு அளவீடு செய்து கொடுக்காமல் உள்ளது. எனவே விசாரணை செய்து, அளவீடு செய்து வழங்க வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.



# கவர்ச்சி நடிகை என்பதால் திருமணம் நடக்கவில்லை



பிரபல கவர்ச்சி நடிகை சோனா தனது வாழ்க்கையை 'ஸ்மோக்' என்றபெயரில்வெப்தொடராகஎடுத்துள்ளார். அவரே இதில் நடித்து இயக்கி உள்ளார்.

இதுகுறித்து சோனா அளித்துள்ள பேட்டியில், "எனது 23 ஆண்டு சினிமா பயணத்தில் நிறைய ஏற்ற, இறக்கம், சந்தோஷம், சோகம் ஏன் மரண அடி கூட வாங்கியிருக்கிறேன். ஆனாலும் ஒவ்வொரு கட்டத்திலும் என்னை நானே உறுதியாக்கி நகர்ந்தேன்.

என்னைகவர்ச்சிநடிகைஎன்றுதான்அழைக்கிறார்கள். அதற்கு காரணம் நான்தான். அது தவறு என்று சொல்லவில்லை. ஒரு கட்டத்துக்கு மேல் அந்த பெயர் எனக்கு பிடிக்கவில்லை. ஏனெனில் இந்த அடையாளத்தால் எனக்கு திருமணம் நடக்கவில்லை. ஒரு கருத்தை சொன்னால் கூட, 'இவளே அப்படி... கருத்து சொல்ல வந்துட்டா...' என்று பேசுவார்கள்.

நான் கவர்ச்சி நடிகை என்பது திரையில் மட்டும்தான். மற்றபடி நானும் ஒரு பெண்தான்.

ஒரு கட்டத்தில் என் நிஜ வாழ்க்கையை படமாக்க முடிவுசெய்துவெப்தொடராகஉருவாக்கிஇருக்கிறோம். ஸ்மோக் என்று பெயரிட்டுள்ளோம். என் வலிகளை உள்ளடக்கிய படம் இது.

'கவர்ச்சிநடிகைதானே.. இவ என்னபடம் எடுத்துவிட போகிறாள்?', என்ற கேள்வி எழுந்தது. ஆனால் என் டீம் எனக்கு உறுதுணையாக இருந்தனர். 4 மொழிகளில் 130க்கும் மேற்பட்ட படங்களில்நடித்துள்ளேன். என்னை இயக்கிய அனைத்து இயக்குனர்களுக்கும் இந்த படத்தை சமர்ப்பிக்கிறேன்.

ஸ்மோக் வெப் தொடரில் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் நான் சந்தித்த பல உண்மை சம்பவங்கள் சொல்லப்பட்டு உள்ளன. இது ஒரு எமோஷனல் கதை'' என்றார்.

# விஜய் நடித்துள்ள திரைப்படம் 'லியோ'. இப்படம் நாளை வெளியாகிறது

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

லியோ திரைப்படம் வருகிற 19ந்தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் டிக்கெட் முன்பதிவுகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திரையரங்குகளிலும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் லோகேஷ் கனகராஜ் தனது சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார்.

அதில், 'லியோ' படத்திற்கு முன்பு லோகேஷும் அனிருத்தும் கைகோர்த்து நிற்பது போன்ற புகைப்படத்தை பகிர்ந்து 'லாக்ட் அண்ட் லோடட்' (Locked & Loaded) என்று குறிப்பிட்டுள்ளார். இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

# திருநங்கையாக மாறிய ஜி.பி.முத்து



பிக்பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் ஜி.பி. முத்து புகழ் மேலும் அதிகரித்தது. இவர் திரைப்படங்களிலும் நடித்து வருகிறார்.

டிக்டாக் மூலம் பிரபலம் அடைந்தவர் ஜி.பி.முத்து. தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஜி.பி.முத்து தனது யதார்த்த பேச்சின் மூலம் மிக பிரபலம் அடைந்தார். நாளுக்கு நாள் இவரின் பாலோவர்கள் எண்ணிக்கை அதிகரித்து பல லட்சங்களை தாண்டியது. இதையொட்டி புகழின் உச்சிக்கு சென்றஜி.பி.முத்துசினிமாவில்அறிமுகமாகி நடிக்க தொடங்கினார்.

தனியார் நிகழ்ச்சிகள், திரைப்பட விழாக்கள், சின்னத்திரை நிகழ்ச்சி என பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பிரபலங்களில் ஒருவராக வலம் வர தொடங்கினார். பிக்பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் இவரது புகழ் மேலும் அதிகரித்து சினிமா வாய்ப்புகள் வரிசையாக வரத்தொடங்கின. அந்த வகையில் இப்போது அவர் 'ஆர்வன்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில்ஜி.பி.முத்துதிருநங்கைகதாபாத்திரத்தில்நடித்து வருகிறார். படத்தின் முதல் பார்வை சமீபத்தில் வெளியிடப்பட்டது. இந்த போஸ்டரை ஜி.பி. முத்து தனது வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

# தெலுங்கு பிக்பாஸ் நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட கிரண் ரத்தோட் இன்ஸ்டாகிராமில் மீண்டும் கவர்ச்சி ஆட்டம்

சீயான் விக்ரம் நடித்த ஜெமினி திரைப்படத்தில் அச்சில் வார்த்த சிலைபோல இருந்தார் நடிகை கிரண். அந்த படம் வெற்றிப்பெற்றதை அடுத்து பிரசாத்துடன் வின்னர், கமலுடன் அன்பே சிவம் போன்ற திரைப்படங்களில் நடித்து பிரபலமானார்.

இந்த திரைப்படங்கள் அனைத்தும் வசூலை குவித்த நிலையிலும் இவருக்கு படவாய்ப்புஇல்லை. இதையடுத்து, விஜய்நடித்ததிருமலைபடத்தில்வாடியம்மா ஜக்கம்மா என்ற பாடலுக்கு குத்தாட்டம் போட்டு ரசிகர்களை துள்ள வைத்தார்.

இதனையடுத்து சுந்தர்சி இயக்கத்தில் வெளியான முத்துனகத்திரிக்காய் படத்தில் அம்மா ரோலில் நடித்திருந்தார். மேலும், விஷாலுடன் ஆம்பள படத்தில் ஆண்டியாக நடித்திருந்தார். தொடர்ந்து நடிகை கிரணுக்கு படவாய்ப்புகள் குறைந்ததால் தனது பெயரில் புதிய ஆப் ஒன்றை தொடங்கி கவர்ச்சி காட்டி சம்பாதித்தார். சில நாட்களுக்கு முன் தெலுங்கு பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று ஒரே வாரத்தில் எவிக்ட்டாகி வெளியேறினார்.



இந்தநிலையில், இன்ஸ்டாகிராமில் கவர்ச்சி போட்டோக்களை பகிர்ந்து அதகளப்படுத்தி வருகிறார். இவர் பதிவிடும் கவர்ச்சி போட்டோவிற்கு லைக்குகள் குவிந்தாலும் சிலர் இந்த வயதில் இது தேவைதானா எனகருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

# முத்த காட்சிகளில் நடிக்கும்போதெல்லாம் என் வீட்டில் தகராறு: நானி அளித்த பேட்டி



நான் ஈ படம் மூலம் தமிழ்ரசிகர்கள்மத்தியில் பிரபலமானவர் நானி. நீதானே என் பொன் வசந்தம், ஆஹா கல்யாணம், நிமிர்ந்து நில் ஆகிய படங்களிலும் நடித்துள்ளார். தெலுங்கில் முன்னணி கதாநாயகனாக இருக்கிறார்.

சமீப காலமாக நானியின் படங்களில் கதாநாயகியின்உதட்டில் முத்தமிடும் காட்சிகள் இடம்பெறுகின்றன. தற்போது அவர் நடித்துள்ள ஹாய் நன்னா படத்திலும் முத்தமிடும் காட்சி உள்ளது.

இந்த நிலையில் ஐதராபாத்தில் படவிழாவில் பங்கேற்ற நானியிடம் உங்களுடைய எல்லா படங்களிலும் முத்த காட்சிகளை வைக்கும்படி டைரக்டரை நீங்கள் நிர்ப்பந்திக்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதில் அளித்து நானி கூறும்போது, "எனது எல்லா படத்திலும் முத்த காட்சிகள் இல்லை. சில படங்களில் மட்டும் இந்த மாதிரி காட்சிகள் இருக்கின்றன. அதுபோன்ற காட்சிகளில் நடிக்கும்போதெல்லாம் என் வீட்டில் தகராறு நடக்கிறது.

ஆனால் நான் ஒரு நடிகன். கதைக்கு தேவைப்படும்போது அது போன்ற காட்சியில் நடிக்கிறேன். எனது கடந்த காலத்து படங்களை பார்த்தால் உங்களுக்கு இந்த விஷயம் புரியும். சினிமாவிற்கு முத்த காட்சி அவசியம் என்று இருந்தால் மட்டுமே நடிப்பேனே தவிர விளம்பரத்துக்காக நடிக்க மாட்டேன்'' என்றார்.

# 'உன் நலனுக்காக விரதம் இருப்பேன்' நடிகைக்கு, சிறையில் இருந்து சுகேஷ் சந்திரசேகர் கடிதம்




இரட்டை இலை சின்னத்துக்காக தேர்தல் கமிஷனுக்கு லஞ்சம் கொடுத்ததாக கூறப்பட்ட வழக்கில் சிக்கி பிரபலம் ஆனவர் சுகேஷ் சந்திரசேகர். பெங்களூருவைச் சேர்ந்த இவருக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. இதன்பிறகும் அவர் பல்வேறு நடிகைகளுடன் தொடர்பு வைத்ததாக தெரிகிறது. இதற்காக அவர் பல கோடிகளை செலவு செய்துள்ளார்.

இதில் அவருடன் நெருக்கமாக பேசப்பட்டவர் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ். இவர்கள் திருமணம் செய்ய இருந்த நேரத்தில்தான் சுகேஷ் சந்திரசேகர் மீது வழக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் அவரால் வெளியே வரமுடியவில்லை. டெல்லி மண்டோலி சிறையில் இருக்கிறார். சுகேஷ் சந்திரசேகர் சிறையில் இருந்தாலும் அடிக்கடி கடிதங்கள் எழுதி பரபரப்பாகி வருகிறார்.

இந்த நிலையில், தற்போது அவர் தன் காதலி ஜாக்குலின் பெர்னாண்டசுக்கு காதல் ரசம் சொட்ட சொட்ட கடிதம் எழுதி இருக்கிறார். இதுதான் தற்போது டெல்லியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. ஜாக்குலின் பெர்னாண்டஸ் சமீபத்தில் தோகா கண்காட்சியில் தோன்றி அசத்தினார். இதை நினைவுபடுத்தி சுகேஷ் சந்திரசேகர் கடிதத்தை தொடங்கியிருக்கிறார். "பேபி, தோகா ஷோவில் நீ கவர்ச்சியாகவும், மிக அழகாகவும் இருந்தாய். என் பொம்மா...உன்னைவிட யாரும் அழகில்லை" என வழிந்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து ஜாக்குலினுக்காக நவராத்திரி விரதம் இருக்கப்போவதாக தெரிவித்து உள்ளார். "உன் நல்வாழ்வுக்காக, நம்மைச் சுற்றியுள்ள எதிர்மறை எண்ணங்களை அகற்றுவதற்காக 9 நாட்களும் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன். மாதாவின் சக்தியால் எல்லாமே நமக்கு சாதகமாக இருக்கும். உண்மை வெல்லும். நாம் விரைவில் ஒருவரோடு ஒருவராக இருப்போம். என்ன நேர்ந்தாலும் ஒன்றாகவே வாழ்வோம். என் பேபி..." என்று காதல் ரசத்தை கொட்டியிருக்கிறார். மேலும் நான் உன்னை நேசிப்பதை எந்த சிறையாலும் தடுக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

# டென்மார்க், பிரெஞ்சு ஓபன் பேட்மிண்டனில் இருந்து பிரனாய் காயத்தால் விலகல்



டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி ஓடென்ஸ் நகரில் இன்று முதல் 22ந் தேதி வரையும், பிரெஞ்சு ஓபன் பேட்மிண்டன் போட்டி வருகிற 24ந் தேதி முதல் 29ந் தேதி வரையும் நடக்கிறது. இந்த இரண்டு போட்டியில் இருந்தும் உலக தரவரிசையில் 8வது இடத்தில் இருக்கும் 31 வயது இந்திய வீரர் எச்.எஸ்.பிரனாய் விலகி இருக்கிறார்.

சமீபத்தில் நடந்த ஆசிய விளையாட்டு போட்டியில் முதுகு வலியுடன் ஆடி ஒற்றையர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற பிரனாய் காயத்தில் இருந்து குணமடைந்து முழு உடல் தகுதியை எட்டுவதற்கு 23 வாரம் பிடிக்கும் என்று தெரிகிறது. இதனால் அவர் இந்த போட்டிகளில் இருந்து ஒதுங்கி இருக்கிறார்.

# யூரோ கோப்பை கால்பந்து சாம்பியன்ஷிப் தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டத்தில் குரோஷியாவை வீழ்த்தி வேல்ஸ் வெற்றி



17வது ஐரோப்பிய கால்பந்து தொடர் (யூரோ சாம்பியன்ஷிப்) ஜெர்மனியில் அடுத்த ஆண்டு (2024) ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடக்க உள்ளது. தொடரை நடத்தும் நாடான ஜெர்மனி தவிர எஞ்சிய 23 அணிகள் தகுதிச்சுற்று மூலம் இந்த தொடருக்கு தகுதி பெற உள்ளன.

தகுதிச்சுற்றில் பங்கேற்றுள்ள 23 அணிகள் 10 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதில் ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் இடம் பிடித்துள்ள மற்ற அணிகளுடன் உள்ளூர் மற்றும் வெளியூர் அடிப்படையில் 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் நேரடியாக தகுதி பெறும்.

அதன்படி 'டி' பிரிவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வேல்ஸ் மற்றும் குரோஷியா அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வேல்ஸ் 21 என்ற கோல் கணக்கில் குரோஷியா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. வேல்ஸ் அணி தரப்பில் ஹாரி வில்சன் வெற்றிக்கான 2 கோல்களையும் அடித்தார். குரோஷியா அணி தரப்பில் மரியோ பாசிலாக் கோல் அடித்தார். இந்த வெற்றியின் மூலம் வேல்ஸ் 'டி' பிரிவின் புள்ளி பட்டியலில் 2வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. குரோஷியா 3வது இடத்தில் உள்ளது.

# தென் மண்டல சப்ஜூனியர் ஆக்கி போட்டி சென்னையில் தொடக்கம்




தமிழ்நாடு ஆக்கி அமைப்பு சார்பில் முதலாவது தென் மண்டல சப் ஜூனியர் ஆக்கி சாம்பியன்ஷிப் போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கி 24ந் தேதி வரை நடக்கிறது. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி, தெலுங்கானா, தமிழ்நாடு ஆகிய அணிகள் கலந்து கொண்டு மோதுகின்றன. ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் புள்ளி பட்டியலில் முதலிடத்தை பிடிக்கும் அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றும்.

இந்த போட்டியில் இருந்து 30 பேர் கொண்ட தென் மண்டல அணி தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படும். அதில் இருந்து தேர்வு செய்யப்படும் அணி மண்டலங்களுக்கு இடையிலான சப்ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொள்ளும். அந்த போட்டியின் முடிவில் இந்திய பயிற்சி முகாமுக்கு 45 வீரர், வீராங்கனைகள் தேர்வு செய்யப்படுவார்கள். அதில் இருந்து இந்திய சப்ஜூனியர் ஆக்கி அணிக்கான வீரர், வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுவதுடன் வெளிநாட்டு தொடர்களில் விளையாட ஆக்கி இந்தியா சார்பில் வாய்ப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்படும்.

தொடக்க நாளான இன்று நடைபெறும் பெண்கள் பிரிவு லீக் ஆட்டங்களில் புதுச்சேரிகர்நாடகா (காலை 6.30 மணி), ஆந்திராகேரளா (காலை 8.15 மணி), தெலுங்கானாதமிழ்நாடு (காலை 10 மணி), ஆண்கள் பிரிவு லீக் ஆட்டங்களில் கர்நாடகாபுதுச்சேரி (பகல் 11.45 மணி), கேரளாஆந்திரா (பிற்பகல் 2 மணி), தமிழ்நாடுதெலுங்கானா (மாலை 4 மணி) அணிகள் மோதுகின்றன.

இந்த தகவலை தமிழ்நாடு ஆக்கி அமைப்பு தலைவரும், ஆக்கி இந்தியா பொருளாளருமான சேகர் மனோகரன் சென்னையில் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார். அப்போது பொதுச் செயலாளர் செந்தில் ராஜ்குமார், இந்திய அணியின் முன்னாள் கேப்டன் முகமது ரியாஸ், நெல்லை மாவட்ட தலைவர் சேவியர் ஜோதி சற்குணம் ஆகியோர் உடனிருந்தனர்.

# உலகக்கோப்பை கிரிக்கெட் : ஜிம்பாப்வே அணியின் மோசமான சாதனையை சமன் செய்த இலங்கை அணி



13வது உலகக்கோப்பைகிரிக்கெட் போட்டி இந்தியாவின்பல்வேறுநகரங்களில்நடந்துவருகிறது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்ஆப்பிரிக்கா, இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும். இந்நிலையில் நேற்று நடைபெற்ற 14வது லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகள் மோதின. இதில் டாஸ் வென்று பேட்டிங்கை தேர்வு செய்த இலங்கை 209 ரங்களுக்கு ஆல் அவுட் ஆனது. பின்னர் களம் இறங்கிய ஆஸ்திரேலியா அணி 35.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 215 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆஸ்திரேலியா தனது முதல் வெற்றியை பதிவு செய்தது. ஆனால் இலங்கை அணி ஹாட்ரிக் தோல்வி அடைந்துள்ளது. இந்த தோல்விகளின் மூலம் இலங்கை அணி ஒரு மோசமான சாதனையை சமன் செய்துள்ளது. இதில் உலகக்கோப்பை தொடரில் அதிக தோல்விகளை பெற்று முதலிடத்தில் இருந்த ஜிம்பாவே அணியின் சாதனையை இலங்கை சமன் செய்துள்ளது. இரு அணிகளும் இதுவரை 42 தோல்விகளை பதிவு செய்துள்ளன. இதற்கு அடுத்ததாக மேற்கு இந்திய தீவுகள் அணி உள்ளது. இந்த அணி 35 தோல்விகளை சந்தித்துள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.